DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Proceedure)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 100/2020
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

பெயர் ஜோதிகா

கணவர் பெயர் முத்துகிருஷ்ணன்

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10/**10**/**2022**

**குறுக்கு விசாரணை**

1.)நான் 10 ஏக்கரில் விவசாயம் செய்து வருகிறேன். கடமலைப்புத்தூர் ஆத்தூரில் 10 ஏக்கர் நிலம் உள்ளது. எதிரி சுகன்யாவை 7 அல்லது 8 வருடங்களாக தெரியும். சுகன்யாவை எப்படி தெரியும் என்றால் அவர் வங்கி மேலாளராக இருந்த வங்கியில் எனது வங்கி கணக்கு இருப்பதால் வங்கி மேலாளர் கணக்கு வைத்திருப்பவர் என்ற முறையில் தெரியும். எனது கணவரும் அந்த வங்கியில் தான் கணக்கு வைத்திருக்கிறார். சுகன்யாவை எனக்கு நேரடியாக தெரியும்.

2.)எதிரி எனக்கு எவ்வளவு பணம் தரவேண்டும் என்றால் 10 லட்சம் தரவேண்டும். வீடு கட்டுவதற்காக 10 லட்சம் வாங்கினார். 10 லட்சம் ரூபாயை 3 தவனையாக கொடுத்தேன். 06-10-2019 ல் ரூபாய் 5 லட்சமும் 09-10-2019 ல் 4 லட்சத்து 40 ஆயிரம் கொடுத்தேன். 02-11-2019 ல் ரூபாய் 50 ஆயிரம் கொடுத்தேன். ஆகமொத்தம் 9 லட்சத்து 90 ஆயிரம் கொடுத்தேன். நேரடியாக நான் தான் எதிரிக்கு பணம் கொடுத்தேன். வங்கி கணக்கு மூலம் எதிரிக்கு பணம் கொடுத்தேன். நேரடியாக ரொக்க பணமாக கொடுக்கவில்லை.

3.) எனது கணவர் முத்துகிருஷ்ணனுக்கும் எதிரி சுகன்யாவுக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் உள்ளது என்றால் சரிதான். அது சம்மந்தமாக எனது கணவர் எதிரி சுகன்யாவிற்கு ஏற்கனவே வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருக்கிறார் என்றால் சரிதான். இந்த நீதிமன்றத்தில் எனது கணவர் சுகன்யா மீது ஒரு வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது.

4.) எனது கணவர் 05-02-2022 ல் இறந்துவிட்டார். எனது கணவர் இறந்த பிறகு தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை அதற்கு முன்பே தாக்கல் செய்துவிட்டேன். 2 பைசா வட்டிக்கு கடன் கொடுத்திருந்தேன். ஆனால் வட்டி எதுவும் இதுநாள் வரையிலும் எதிரி கொடுக்கவில்லை. எனக்கு வட்டிக்கு பணம் கொடுக்கும் பழக்கம் இல்லை. எதிரி வீடு கட்ட பணம் கேட்டதால் கொடுத்தேன். எனது கணவருக்கு வட்டிக்கு பணம் கொடுக்கும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை.

5.) எதிரிக்கு பணம் கொடுக்கும் போது பாண்டு எழுதி வாங்கியிருக்கிறேன் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். எந்த தேதியில் பாண்டு எழுதி வாங்கினேன்

என்றால் 02-11-2019 ல் எழுதி வாங்கினேன். 23-06-2020 ல் காசோலையை எதிரியிடமிருந்து வாங்கினேன். எனது வீட்டிற்கு வந்து காசோலையை கொடுத்தார். இரண்டு காசோலைகளையும் அவரே நிரப்பி கையொப்பம் போட்டுக்கொடுத்தார்.

6.) கையொப்பம் செய்யப்பட்டதும் தொகை எழுதப்பட்டதும் வேறு வேறு மையினால் எழுதப்பட்டது என்றால் இல்லை இரண்டும் ஒன்றுபோல் தான் உள்ளது. வட்டி பணம் எனது வங்கி கணக்கிற்கோ அல்லது எனது கணவரின் வங்கி கணக்கிற்கோ சுகன்யா செலுத்தியிருக்கிறாரா என்றால் எனது வங்கி கணக்கிற்கு செலுத்தவில்லை எனது கணவரின் வங்கி கணக்கு பற்றி தெரியாது.

7.) எனது கணவரின் வங்கி கணக்கில் சுமார் 9 லட்சம் ரூபாய் நான் கொடுத்த கடனை சுகன்யா செலுத்தியிருக்கிறார் என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு எந்த தேதியில் அனுப்பினேன் என்றால் 30-06-2020 ல் அனுப்பினேன். நீதிமன்றத்தில் எப்போது இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கை கால தாமதமாக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8.) எதிரி இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனது கணவருக்கு பணம் கொடுத்துள்ளதாக அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால்அது பற்றி எனக்கு தெரியாது. நவம்பர் 2019 முதல் ஏப்ரல் 2020 வரை 6 பைசா வட்டி வீதம் மாதத்திற்கு 60 ஆயிரம் வட்டி நான் வாங்கியிருக்கிறேன் என்றாலும் அதற்கான ஆதாரம் என்னிடம் உள்ளது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய வங்கி கணக்கிற்கு வரவில்லை. (**எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணை தேதி மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது**)